புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை அறிவிக்கப்படும்; புத்தாக்க கண்டுபிடிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்; காஞ்சிபுரம் மாவட்டம், ஆலத்தூரில் புதியதாகத் தொழிற்பேட்டை அமைக்கப்படும்; இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டுமயமாக்கும் வகையிலும், அந்நிய நாட்டு ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணமும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்படும் என்பது போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பிலும், துறையின் சார்பிலும், ஒட்டுமொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

5. தகவல் கோரல்

(அ) திரைப்பட நடிகர் திரு. S.Ve. சேகர் கைது செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட நடிகர், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் பத்திரிகைத் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்கள், குறிப்பாக, பெண்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, சற்றுப் பொறுங்கள். அதுகுறித்து என்னுடைய கவனத்திற்கு வந்தவுடனே, அதைப்பற்றி அரசிடம் விசாரித்தேன். அது என்னவென்று கேட்டேன். அவர்கள் சொல்கிற பதில் என்னவென்றால், நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை,

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, நீதிமன்றம்தான் arrest பண்ணச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறது.

2018 ஜூன் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு. . .*

திரு. மு.க. ஸ்டாலின்: *இன்னும் கைது செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *20 ஆம் தேதி நீதிமன்றத்தில் அவர் ஆஜராக உத்தரவிட்டிருக்கிறார்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *போலீஸ் துணையோடு, சுதந்திரமாக, வெளியிலே நடமாடிக்கொண்டிருக்கிறார். அவர் தலைமறைவாகக்கூட இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தச் சமயத்தில், நீதிமன்றம், (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. நீதிமன்றம் ஓர் உத்தரவைப் போட்டிருக்கிறது. அவரை 20 ஆம் தேதி நீதிமன்றத்தில ஆஜராகும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *அது வேறு விஷயம். அவர் இன்னும் கைது ஆகாமல்,* arrest *ஆகாமல் இருப்பதற்குத்தான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆகவே, நீதிமன்றத்தின் நடவடிக்கையில் இருக்கின்ற, (குறுக்கீடு) இல்லை, நீதிமன்ற நடவடிக்கைகளில் இருக்கின்ற ஒரு பொருளை, நாம் இங்கே விவாதிப்பது முறையாக இருக்காது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நீதிமன்றத்தின் நடவடிக்கை குறித்து நான் பேசவில்லை. காவல் துறை ஏன் இன்னும் அவரைக் கைது செய்யவில்லை என்றுதான் கேட்கிறேன். இதுவரையில், காவல் துறை செய்யவில்லை. அவர் சுதந்திரமாக,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துவிட்டு, அந்தப் பொருள் நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றம் அவரை 20 ஆம் தேதி வரும்படி உத்தரவிட்டிருக்கிறது. நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிற ஒரு பிரச்சினையை இந்த அவையிலே விவாதிப்பது சரியாக இருக்காது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நீதிமன்றத்தின் நடவடிக்கைக்குள் நான் செல்லவில்லை. நான் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்குள் செல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் போகவில்லை என்று எனக்குத் தெரிகிறது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நான் நீதிமன்றத்திற்குள் செல்லவில்லை. நீதிமன்ற உத்தரவை காவல் துறை ஏன் நிறைவேற்றவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எழுப்ப வருகிற, (குறுக்கீடு) அதுதான், அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீதிமன்ற உத்தரவு இருக்கிற காரணத்தினாலே, இதை நாம் இந்த அவையிலே விவாதிப்பது சரியாக இருக்காது என்ற காரணத்தினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 20 ஆம் தேதிவரை பொறுத்திருந்து, அதைப்பற்றிப் பேசுவதற்கு ஏதாவது இருந்தால் பின்னர் அதைப்பற்றி பேசலாம். (குறுக்கீடுகள்) நீதிமன்றம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. நீதிமன்றம் ஒரு தெளிவான உத்தரவைக் கொடுத்திருக்கிறது. 20 ஆம் தேதி அவரை ஆஜராகும்படி நீதிமன்றம் கேட்டுக்கொண்டிருக்கிறது. குற்றப்பத்திரிகையும் போலீஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து நீதிமன்றம் 20 ஆம் தேதி என்ன செய்யப் போகிறது என்பது தெரியாது. ஆகவே, அதைப் பற்றி நாம் விவாதிப்பது சரியாக இருக்காது என்கிற காரணத்தினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பொருளை விடுத்து, வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், அதைப்பற்றி தயவு செய்து பேசலாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை ஏன் கைது செய்யவில்லை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அது வேண்டாம். நீதிமன்றம் அவரை, (குறுக்கீடு) நீதிமன்றம், (குறுக்கீடு) அதுவல்ல, இவற்றையெல்லாம் நாம் இங்கே பேச முடியாது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

இதையெல்லாம் பேசினால், விவாதம் சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்) இல்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

2018 ஜூன் 13] [பேரவைத் தலைவர்]

நீதிமன்றம் உத்தரவைப் போடவில்லை என்று சொன்னால், நீதிமன்றம் எந்த உத்தரவையும் கொடுக்கவில்லை என்று சொன்னால், அதைப்பற்றி நீங்கள் பேசுவதற்கு நான் முழுமையாக அனுமதிப்பேன். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. சற்று பொறுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

சற்று பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நானும் பேசிக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு—ஒரு பொருள் நீதிமன்றத்தின் முன்னிலையில், விசாரணையில் இருக்கிறது. நீதிமன்றம் ஒரு தெளிவான உத்தரவை, ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதற்குப் பின்னாலே, நீதிமன்றம் ஓர் உத்தரவு போடுகிறது. அவர் ஆஜராக வேண்டுமென்று ஒரு தெளிவான உத்தரவை, 20 ஆம் தேதி ஆஜராக வேண்டுமென்று ஒரு கெடு கொடுத்திருக்கிறது. நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டிருக்கிறபோது, 20 ஆம் தேதிக்கு முன்னதாக மற்றவர்கள் அதைப்பற்றிப் பேசுவதும், விவாதிப்பதும், அடுத்து வருகிற நீதிமன்ற நடவடிக்கைகளில் நாம் தலையிடுவது மாதிரி ஆகிவிடும். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அது குறித்துப் பேச வேண்டாம். அந்தப் பொருள் குறித்துப் பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால், நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள், நான் அரசை என்னவென்று கேட்கிறேன்.

முற்பகல் 11—40

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேண்டாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, மன்னிக்க வேண்டும். ஒரு நிமிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றத்தின் வழக்கிற்குள் செல்ல விரும்பவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வழக்கு குறித்துப் பேச விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) இப்போதுதான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், இந்த வழக்கு எத்தனை நாட்களாக நடந்துகொண்டிருக்கிறது. ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. ஏன் இதுவரையில் கைது செய்யவில்லை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை கைது செய்யாததால்தான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இதையெல்லாம் இதற்கு முன்னால் பேசியிருந்தால், அது சரியாக இருந்திருக்கும். நீதிமன்றம் 20 ஆம் தேதி என்று ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து, இந்த மன்றத்தில் விவாதிக்க நான் அனுமதிப்பது, நீதிமன்ற அவமதிப்பிற்கு உள்ளாகும் என்கிற காரணத்தினால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிட்டு, வேறு ஏதாவது பிரச்சினை குறித்து கேளுங்கள். நான் அனுமதிக்கிறேன். இது குறித்து பேச வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் எதற்காக அந்த உத்தரவு போட்டிருக்கிறதென்றால்—காவல் துறை அவரை ஏன் கைது செய்யவில்லை ஆக நீங்களாக ஆஜராகுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், அரசிடம் இது குறித்து தெளிவாக விவாதித்துவிட்டு பின்னர்தான்,(குறுக்கீடு) நீதிமன்றம், . . .*

2018 ஜூன் 13]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. ** எனக்குக் கிடையாது. (குறுக்கீடுகள்) ** எனக்குக் கிடையாது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, எதிர்க்கட்சியினுடைய கடமை, நான் சொல்லியாக வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய கடமை, நீதிமன்றத்தில் இருக்கின்ற எந்தப் பொருள் குறித்தும் இந்த அவையில் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பதுதான். எனக்கு இருக்கின்ற விதி அதுதான். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு எதைக் குறித்துப் பேசினாலும் நான் அனுமதிக்கிறேன். இது குறித்துப் பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இல்லை, இல்லை நீதிமன்றம் இந்த உத்தரவைக் கொடுப்பதற்கு முன்னரே இந்தப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பியிருந்தால், நீங்கள் முழுவதும் பேசுவதற்கு நான் அனுமதித்திருப்பேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வெளிநடப்புச் செய்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது உங்கள் உரிமை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் கைது குறித்து இங்கே பேசி ** என்ற அடிப்படையில் எனக்கு பேசுவதற்கு நீங்கள் அனுமதி தரவில்லை. எனவே, நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது பேரவைத் தலைவரையே **நான் ** முயற்சி செய்யவில்லை. அது அவைக் குறிப்பில் இருப்பது எனக்கு ** ஏற்படுத்தும் என்கிற காரணத்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை, அந்தக் கடைசி வார்த்தையை பேரவைத் தலைவர் ** என்று வருகிற அந்த*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், என்ன? சொல்லுங்கள். நேற்று காலையில் என் அறையில் வந்து என்னைப் பிரச்சினைக்குள்ளாக்கி அது பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. இன்றைக்கு அது போன்று எதுவும் செய்யாமல் நீங்கள் உங்கள் தொகுதிக்குண்டான பிரச்சினையைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்களே இரண்டு நோட்டீஸ்களை என்னிடம் கொடுத்துவிட்டு நேற்று தேவையில்லாமல் என்னை ** செய்துவிட்டீர்கள். சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை திரு. எஸ்.வி. சேகர் அவர்களைக் கைது செய்வது குறித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் இல்லை, இந்தப் பொருள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொன்ன அதே பதில் தான் உங்களுக்கும் பொருந்தும், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது குறித்துப் பேசப்போவதாக என்னிடம் முன்னரே அனுமதி கேட்டார். நீங்கள் எதுவும் கேட்காமல் raise செய்வதற்கு அனுமதியில்லை. நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், என்ன சொல்லுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006–2011 வரையிலான தி.மு.க. ஆட்சியில் பல்வேறு வழக்குகள் குறித்து நாங்கள் இந்தச் சபையில் பிரச்சினைகளை எழுப்பியபோது, அப்போதைய முதலமைச்சரும், அப்போது துணை முதலமைச்சராக இருந்த திரு. ஸ்டாலின் அவர்களும், நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு குறித்து எந்தப் பொருளையும் இங்கே பேசுவதற்கு அனுமதி இல்லையென்று அனுமதி மறுத்தார்கள்.

ஆகவே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கடைசி வரை கேட்காமல், வெளிநடப்புச் செய்யும் இந்த நிலை இனிமேல் இருக்கக் கூடாது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.